கலக்காமல் ஒரு காரியத்தைச் செய்ய ஆரம்பித்தால் அங்கே கட்டுப்பாடு இருக்காது. நிர்வாக அமைப்பு முறை சரியாக இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[பிற்பகல் 12-20]

(9) காவேரிப்பட்டணம் ஒன்றியத்தில் பணிபுரியும் பகுதி நேர ஆயாக்களுக்கு சம்பளக் குறைப்பு குறித்து.

டாக்டர் கே. சமரசம்: தலைவரவர்களே, ''காவேரிப் பட்டினம் ஒன்றியத்தில் பணி புரியும் பகுதி நேர ஆயாக் களுக்குச் சம்பளம் குறைக்கப்பட்டதால் நிலவும் பதட்ட நிலை குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் கவனத் திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவரவர்களே, அவை முன் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை.

20—2—1950 நாளிட்ட அரசு ஆணை எண் 531-ல் பள்ளி களில் ஆயாக்கள் நியமிக்க வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது. இதன் படி 30-க்குக் குறையாமலும் நூறுக்கு மேற்படாமலும் மாணவிகள் உள்ள ஆரம்பப் பள்ளிகளில் ஒரு ஆயாவையும், 100-க்கு மேற் பட்டதும் 200-க்கு மேற்படாமலும் மாணவிகள் உள்ள பள்ளி களில் இரண்டு ஆயாக்களையும் 200-க்கு மேற்பட்ட மாணவிகள் உள்ள பள்ளிகளில் மூன்று ஆயாக்களையும் நியமிக்கலாம். குழந்தைகளைப் பள்ளிக்கு அழைத்து வர முதலில் இந்த ஆயாக் கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்களின் ஓய்வு வயது 60.

2. பகுதிநேர பள்ளி ஆயாக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலை வர் வரையறுக்கக் கூடிய மார்க்கெட் விகிதத்தில் சம்பளம் வழங்கப்படுகிறது. இவர்களுக்குப் படிகள் ஏதும் கொடுக்கப் படுவதில்லை. ஆனால் முழு நேர பள்ளி ஆயாக்கள் மாவட்ட ஆட்சித் தலைவர் வரையறுக்கக் கூடிய மார்க்கெட் விகிதங்களில் சம்பளம் பெறுகின்றனர். அத்துடன் அவர்கள் பெறத் தகுதி யுடைய படிகள் அதாவது அகவிலைப்படி முதலியவற்றையும் பெறுவர்.

3. தர்மபுரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தில் 110 முழு நேர ஆயாக்களும், 35 பகுதி நேர ஆயாக்களும் பணி புரிந்து வருகின்றனர். முழு நேர ஆயாக்களுக்கு மொத்தச் சம்பளமாக ரூ. 255-ம் பகுதி நேர ஆயாக்களுக்கு மொத்தச் சம்பளமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 18-ம் வழங்கப்பட்டு வருகிறது.

4. பகுதி நேர ஆயாக்கள் 1974–75-ல் நியமிக்கப்பட்டனர். காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியத்தின் தீர்மானம் 14 (1050) தேதி 7—6—1974-ன் படி பகுதி நேர ஆயாக்களின் மாதச் சம்பளம் ரூ. 75 ஆக நிர்ணயிக்கப்பட்டது. இந்த விகிதம் 31—3—1978 வரை கடைபிடிக்கப்பட்டது. விதிகளின்படி பகுதி நேர ஊழியர்கள் மாதச் சம்பளம் ரூ. 18 மட்டுமே பெறத் தகுதியுடையவர்கள் (மாவட்ட ஆட்சித் தலைவரால் நிர்ணயிக்கப்படும் மார்க்கெட் விகிதம்). ஆகவே, சம்பளத்தை ரூ. 75 ஆக நிர்ணயம் செய்ததை ஒன்றிய கல்வி நிதிக் கணக்குத் தணிக்கை அறிக்கைகளில் 1974–75 முதல் 1977–78 வரை ஆட்சேபிக்கப்பட்டது. எனவே காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றிய ஆணையர் பகுதி நேர ஊழியர்களுக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ரூ. 18 ஆக பகுதி நேர ஆயாக்களுக்குக் குறைத்து நிர்ணயம் செய்துள்ளார். எனினும், 31—3—1978-க்கு முன் கொடுக்கப்பட்ட அதிகப்படித் தொகையை இதுவரை பிடித்தம் செய்யப்படவில்லை.

5. உள்ளாட்சி நிறுவனங்களின் கீழ் உள்ள பள்ளிகளில் ஆயாக்கள் பணியிடம் தேவையா என்பது பற்றி 1976-ல் அரசால் ஆராயப்பட்டது. தேவையில்லையென முடிவெடுக்கப்பட்டாலும் திடீரென்று அத்தனை பேரையும் உடனே பணியிலிருந்து எடுத்து விட்டால் அவர்களது வாழ்க்கை மிகவும் பாதிக்கப்படும் எனக் கருதி கீழ்க்கண்டவாறு ஆணையிடப்பட்டது.

(1) ஆயாக்கள் விடுமுறையில் சென்றால் அவ்விடங்களை நிரப்பக் கூடாது.

(2) தற்பொழுது ஆயாக்காளாக பணிபுரிபவர்கள் 60 வயதாகி பணியிலிருந்து ஓய்வு பெற்றாலோ அல்லது மற்ற காரணங்களினால் அவர்கள் பணியினை விட்டு வெளியேறினாலோ இப் பதவிகள் குறைக்கப்பட்டுவிட வேண்டும்.

(3) ஆயாக்களாகப் பணிபுரிபவர்களை வேறு பதவிகளில் ஏற்படும் காலியிடங்களில் நியமனம் செய்ய வாய்ப்பிருக்குமேயானால் அவ்வாறு செய்யலாம். அதனால் ஏற்படும் காலியிடங்களை நிரப்பத் தேவையில்லை.

(4) எந்தக் காரணத்தினாலும் புதிதாக ஆயாக்களை நியமனம் செய்யக் கூடாது.

1979 நவம்பர் 10] [டாக்டர் கே. சமரசம்]

6. பள்ளி ஆயாக்களுக்குப் பள்ளிகளில் முழு நேர வேலையில்லாததால் அவர்களுக்குச் சம்பள விகிதம் நிர்ணயிக்கத் தேவை இல்லை எனவும் அரசு முடிவெடுத்தது.

7. எனினும், ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆயாக்கள் நியமனம் அவர்களுக்கு அளிக்கத்தக்க சம்பள விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி பொதுவான கொள்கை ஒன்று வகுப்பது அரசின் பரிசிலனையில் உள்ளது.

டாக்டர் கே. சமரசம் : தலைவரவர்களே, அளிக்கப்பட்டு உள்ள அறிக்கையில் 1974-75-ல் நியமிக்கப்பட்ட பகுதி நேர ஆயாக்களுக்கு 75 ரூபாய் சம்பளம் வழங்கப்பட்டது. பிறகு ஊராட்சி ஒன்றியக் கல்வி நிதிக் கணக்குத் தணிக்கை அறிக்கையில் எதிர்ப்பு தெரிவித்ததன் காரணமாக அவர்களுடைய சம்பளம் 18 ஆக குறைக்கப்பட்டிருக்கிறது. கடைசியில் ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆயாக்கள் நியமனம் அவர்களுக்கு அளிக்கத்தக்க சம்பள விகிதங்கள் ஆகியவற்றைப் பற்றி பொதுவான கொள்கை ஒன்று வகுப்பது அரசின் பரிசிலனையில் உள்ளது என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிப் பரிசீலிக்கும்போது 18 என்று இருப்பதை முன் போலவே மாற்றியமைக்கவும், முழு நேர ஆயாக்களுக்கு 255 ரூபாய் வழங்கப்படுவதை கருத்திற் கொண்டு இவர்களுடைய சம்பளத்தை நிர்ணயிக்கவும் அரசு உத்தரவிடுமா ? அரசு உத்தியோகம் பார்த்து அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழி இல்லை என்ற நிலையை அரசு மாற்றுமா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : கருணையோடு அரசு பரிசீலிக்கும்.

(10) திருவில்லிப்புத்தூர், பென்னிங்டன் அங்காடி கையகப்படுத்துவது குறித்து.

திரு. இரா. தாமரைக்கனி : மாண்புமிகு தலைவரவர்களே, ''திருவில்லிப்புத்தூரில் அமைந்துள்ள பென்னிங்டன் அங்காடியினை கையகப்படுத்தும் செயற்குறிப்பினை கைவிடப் போவதாக இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவித்ததால் அங்குள்ள மக்களிடையே எழுந்துள்ள பதட்ட நிலை குறித்த'' அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அவையில் அறிக்கை வைக்கப்பட்டிருக்கிறது.